# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஐப்பசி 29
ஜுல்ஹஜ் பிறை 13
புதன் (15-11-1978)
நிறுவியது 1947
புத்தகம் 82
இதழ் 48

விலை சதம் 35


# இலவச அரிசி முற்றாக வெட்டு?

# மா, எரிபொருள் விலையேறும்!

## உலகவங்கியின் தாளத்துக்கு யூ.என்.பி. அரசு ஆடுகிறது!

இன்று (15.11.78) சமர்ப்பிக்கப்படும் ஜே. ஆர். அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவு திட்டத்தில், முந்நூறு ரூபாவுக்கு குறைவான சம்பளமெடுப்போருக்கு இப்போது வழங்கப்பட்டுவரும் இலவச அரிசியும் முற்றாக வெட்டப்படக் கூடுமென்றும், மக்களின் அத்தியாவசியப் பொருட்களான மா, எரிபொருட்கள், மருந்துவகைகள் மேலும் விலையேறலாமென்றும் ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன.

இதேசமயத்தில் கண்துடைப்பாக ஒருகுறிப்பிட்ட தொகை சம்பள உயர்வு வழங்கப்படு மென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே விலைவாசிஉயர்வால் தமது நாளாந்தவாழ்க்கையை ஓட்டமுடியாமற் தவிக்கும் இலட்சக் கணக்கான ஏழைமக்களுக்கு புதிய வரவு செலவுத்திட்டம் மேலும் வயிற்றலடிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பாண், மா, என்பன ஜே. ஆர். ஆட்சி ஏற்பட்ட பின்னர் நான்கு தடவைகள் ஏற்கனவே விலை அதிகரிக்கப் பட்டு விட்டன. இப்போது வரவு செலவுத் திட்டத்திலும் இவற்றின் விலைமேலும் அதிகரிக்கப் படலாமென்று கூறப்படுகிறது.

எரிபொருட்கள் விலை அதிகரிக்கப்படும் பட்சத்தில் ஏனைய பொருட்கள் யாவும் விலையேறும் சாத்தியம் உள்ளது.

முந்நூறு ரூபா சம்பளத்துக்கு அதிகமாக எடுப்போர்க்கு இலவச அரிசி இப்போது வழங்கப்படுவதில்லை. இப்போது வழங்கப்படும் இலவச அரிசியையும் இல்லாமற் செய்ய ஆலோசிக்கப் படுவதாகவும், அனைவருக்கும் 300 ரூபாவுக்கு மேல் சம்பளம் இடைக்க வழி செய்து விட்டு, இலவச அரிசியை அறவே அகற்றி விடும் யோசனை அரசுக்கு இருப்பதாகவும் சொல்லப் படுகிறது.

எப்படியும் புதிய வரவு திட்டத்தின்பின் பணவீக்கவு வாழ்க்கைச்செலவுப்பளுவும் கொடிகட்டிப் பறக்கப் போவது உறுதியாகிவிட்டது.

அமெரிக்க வல்லரசின் உலக வங்கியின் தாளத்துக்கு யூ-என்-பி, முதலாளித்துவ அரசு ஆடிவருவதாகவும், இதனாலேயே மக்கள்மீது தாங்கொணாச் சுமையேற்றப்படுவதாகவும் சோசலிச வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன.

## தொலைபேசி
## மின்சாரம்
## தபால் கட்டணம்
## உயர்வு

10.11-78 முதல் அஞ்சற் கட்டணங்கள் இரட்டிப்பாக உயர்த்தப்பட்டுள்ளன. இதன்படி, ஒரு அவுன்ஸ் நிறைக்குக்குறைந்த சாதாரண கடிதத்துக்கு 25 சதம் அஞ்சல்தலை ஒட்டவேண்டும், (அதாவது இப்போது 10 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.)

பொதிக்கட்டணம்முதலாவது இறுத்தல் 60 சதத்திலிருந்து ஒரு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக ஒவ்வொரு இறுத்தலுக்கு 50 சதம் வசூலிக்கப் படவுள்ளது, அதாவது முதலாவது இறுத்தலுக்கு 40 சதமும் மேற்கொண்டு ஒவ்வொரு இறுத்தலுக்கும் 20 சதமும், முன்னையைவிட கூடுதலாக செலுத்தவேண்டும்.)

பதிவுசெய்யப்பட்ட பத்திரிகைகளிடமிருந்து ஒவ்வொரு 4 அவுன்சுக்கும் 15 சதம் அறவிடப்படும்.

இதைவிட, தொலைபேசிக் கட்டணமும் அதிகரிக்கப் பட்டுள்ளது, மின்சாரக்கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சரின் அறைக்கு குளிரூட்ட ஒரு இலட்சம் விரயம்!

மக்களின் வரிப்பணம் தார்மீக அரசினால் எவ்வாறு பாழடிக்கப்பட்டு வருகிறதென்பதை 'நேஷன்' (3-11-78) செய்தியொன்று புட்டுவைத்திருக்கிறது. போக்குவரத்து அமைச்சு அலுவலகத்தை கொழும்பிலுள்ள அரசாங்க செயலகத்திலிருந்து, டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தைக்கு மாற்றுவதற்கு ஆறரை இலட்ச ரூபா கரியாக்கப்பட்டிருப்பதாக அப்பத்திரிகை தனது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது!

இத்தொகை செலவிடப் பட்டதற்கான விபரங்களையும் அப்பத்திரிகை பின்வருமாறு தந்துள்ளது:—

### மக்களின் வரிப்பணம் பாழாகும் விதம்!

கட்டடம் புதுப்பித்தலுக்கு ரூபா 2,66,750

அமைச்சருக்கு நான்கு குளிரூட்டிகள் பொருத்தப் பட்டசெலவு ரூபா 100,000

பிரதியமைச்சருக்கு இரணடு குளிரூட்டிகள் ரூபா 50,000

செயலாளருக்கு இரண்டு குளிரூட்டிகள் ரூபா 30,000

அலுவலகத் தளபாடங்கள்—ரூபா 45,000

எலக்ரோனிக் பொட்கள் ரூபா 22,927—சதம் 3.

போக்குவரத்து செலவு—ரூபா 16,601

பெயர்ப்பலகைகள்- ரூபா 4,000

தளவாடப்பொருட்கள் (Furnishing) ரூபா 9,500

வேஸ்ட் பேப்பர் கூடைகள்—ரூபா 1.000

இரண்டு லெக்றிக் கேட்டில்கள்—ரூபா 700

வயரிங் முதலியன—ரூபா 8719.83

பொதுவான செலவுகள்—ரூபா 85,800

மின்சார சார்ஜ் — ரூபா 10 261

குளிரூட்டி அமைத்த கூலி ரூபா 1,000

பிரதியமைச்சருக்கான குளிர்சாதனப் பெட்டி — ரூபா 4,500

மொத்தமான செலவு—ரூபா 6,56.759

இந்த விபரங்களை நேஷன் பத்திரிகை அம்பலப்படுத்தியுள்ளது. தார்மீக அரசில் மக்கள் வரிப்பணம் எப்படிச் செலவிடப்படுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

## பாதுகாப்பு அமைச்சுக்கு 34 கோடி மேலதிக ஒதுக்கீடு
## துப்பாக்கித் துரைத்தனத்துக்கு இது முன்னேற்பாடா?!

1978ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியைவிட இந்த ஆண்டு பாதுகாப்பு அமைச்சுக்கு 34 கோடி ரூபா மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில், பொலிஸ், இராணுவத்தை நம்பியே ஜே. ஆர். ஆட்சி இயங்கப் போகிறதென்பதை இச்செயல் எடுத்துக் காட்டுவதாக அரசியல் வட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

1978ம் ஆண்டு. 39,20, 28,910 ரூபா பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு73,27,49,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டை விட 34 கோடி ரூபா அதிகமாகும்.

வருங்காலத்தில் வாழ்க்கைச் செலவு, விலைவாசி உயர்வுகளால், மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய பெரும் கிளர்ச்சிகளை நசுக்குவதற்காகவே இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செலவினம் உயர்த்தப்பட்டிருப்பதாகவும், மக்களை நம்பாது, பொலிசையும் இராணுவத்தையும், ஆயுதப் படைகளையும் நம்பியே ஜே. ஆர். ஆட்சி செய்ய வேண்டிய நிலை இப்போது தோன்றியுள்ளதன் விளைவாகவேபாதுகாப்புக்கு இவ்வளவு பெருந்தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்எதிர்க்கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன.

இதுபற்றிதீவிரவாததமிழ் இளைஞர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ்ஈழப் பிரச்சினையை அரசு சமாதானமாகத் தீர்க்காவிடின், நாட்டின் வருமானம் முழுவதையுமேபாதுகாப்புக்காக செலவிட வேண்டி நேரிடலாமென்றும்,இம்முறை 73 கோடி ரூபா ஒதுக்கியவர்கள், அடுத்தமுறை 150 கோடி ரூபா ஒதுக்க நேரிடலாமென்றும், சிங்கள ஆயுதப் படையினராலும், சிங்களப் பொலிசாராலும், இராணுவ நடவடிக்கைகளாலும், தமிழ் ஈழப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிட முடியாதென்றும் குறிப்பிட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அடிப்படையில் நீங்கள் பாரபட்சம் காட்டவில்லையென்று நிரூபிப்பீர்களா?



## ஆளுங்கட்சியினருக்கு இராசலிங்கம் பா. உ. சவால்!

ஐ. தே. கட்சி அரசாங்கம் இன அடிப்படையில் பாரபட்சம் காட்டி நடக்கவில்லையென்பதை உங்களால் நிரூபிக்கமுடியுமா? என்று தேசிய அரசுப்பேரவையில் ஆளுங்கட்சியினருக்கு பகிரங்கமாகச் சவால் விடுத்தார் உடுப்பிட்டி பா. உ. திரு. இராசலிங்கம்.

பல்கலைக்கழக மசோதாவில் பேசிய கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. சிறில் மத்தியூவுக்குப் பதிலளித்துப் பேசியபோதே திரு. இராசலிங்கம் இந்தச் சவாலை விடுத்தார்.

திரு. இராசலிங்கம் பேசுகையில் கூறியதாவது,

", தமிழ் மாணவர்களுக்குக் கூடுதலான புள்ளிகளைப் பேராசிரியர்கள் வழங்கினர் என்று அமைச்சர் திரு. சிறில் மத்தியூ சுட்டிக்காட்டினார். அப்படியானல் அப்படியான பேராசிரியர்களை நியமித்தது யார்? அரசாங்கம் தானே?

"அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரங்களில் பிழை என்றால் அதனை அரசாங்கம் தானே திருத்தவேண்டும்? செய்யவேண்டியதை விட்டு இங்கு வந்து புள்ளி விபரங்களைச் சமர்ப்பிப்பதில்என்ன பயன்?

"தமிழ் மாணவர்கள் விஷயத்தில் மட்டும்தான் இப்படி நடந்திருக்கிறதா? இது போன்று சிங்கள மாணவர்கள் விஷயத்திலும் நடந்திருக்கலாம் தானே? அமைச்சருக்கு உள்ளதுபோல் எமக்குச் சந்தர்ப்பம் தந்தால் இவை குறித்து ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வர முடியும். எம்மாலும் பல விஷயங்களைப் பகிரங்கப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

வேறுபல விடயங்களிலும் அரசால் பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது. சிவில் உத்தியோகத்தர்கள் உயர் அதிகாரிகள் நியமனம், பொலிஸ் பதவி உயர்வு ஆகியவற்றில் நீங்கள் பாரபட்சம் காட்டிவரவில்லையா? இப்படி நடக்கவில்லை என்று உங்களால் நிரூபிக்க முடியுமா? என்று நான் சவால் விடுகிறேன்.

வினாத் தாள்களில் சிங்களத்துக்கும் தமிழுக்கும், ஆங்கிலத்துக்கும் இடையில் மொழிபெயர்ப்புப் பிழைகள் இருக்கின்றன.

"இப்படியான நிலையில் மாணவர்கள் எப்படிப்பதிலை எழுத முடியும்? எப்படிப் பிழையான தமிழ் மொழி பெயர்ப்புக்கு எழுதும்விடை ஏனைய மொழி வினாவுக்கு ஒத்ததாக இருக்கும்?

வடபகுதி கல்வி வளர்ச்சியில் சமய மிஷனரிகளும் நிறுவனங்களும் முக்கிய பங்கு வகித்திருக்கின்றன. கல்வி அமைச்சோ. அரசாங்கமோ எமது பகுதிக்கு என விசேஷ சலுகை அல்லது உதவியைத் தரவில்லை. நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் வடபகுதிக்கு அரசாங்கம் தந்த வசதிகள், உதவிகள் எந்த அளவுக்கு குறைவு என்பது புலனாகும்.

"தமிழ் மாணவர்களின் விடைத்தாள்களுக்கு அதிக புள்ளி வழங்கப்படுகிறது, பரீட்சை வினாக்களும் முன் கூட்டியே தெரிவிக்கப்படுகின்றன என்று பல்கலைக் கழக பேராசிரியர்கள்மீதும், விரிவுரையாளர்கள் மீதும்' ஆசிரியர்கள் மீதும் பொறுப்பற்ற முறையில் குற்றம் சாட்டப்பட்டன.

"பரீட்சை விடைத் தாள்களைத் திருத்த, பல்கலைக் கழக மட்டத்தில் செனட்டும், பாடசாலை மட்டத்தில் பரீட்சை ஆணையாளருமே ஆசிரியர்களையும், பேராசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் தெரிவுசெய்வது வழக்கம்.

"ஆதலால் நீங்கள் சுமத்தும் குற்றங்களுக்கு காரணமானவர்கள் யார்? அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை நீங்களே கண்டுபிடியுங்கள். குற்றம் காணப்பட்டால் யாராயிருப்பினும் தண்டியுங்கள்.",

# தனித் தமிழ் ஈழக்கோரிக்கை அலட்சியப்படுத்தக் கூடியதொன்றல்ல!

## முஸ்லிம் ஐக்கிய கட்சி அறிக்கை'

முஸ்லிம்கள் நாட்டுப் பிரிவினையைஏற்றுக்கொள்ளவில்லை, ஆயினும், தமிழ் ஈழப் பிரச்சினை நீண்ட காலத்துக்கு அலட்சியப் படுத்தக்கூடியதோ அல்லது கடுகடுத்த முகத்துடன்புறக்கணிக்கப்படக்கூடியதோ அல்ல; இராணுவ நடவடிக்கையினாலோ, அல்லது ஒரு தலைப்பட்சமான முடிவுகளை எடுப்பதினாலோ, இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவும் முடியாது?"

—இவ்வாறு அகில இலங்கை முஸ்லிம் ஐக்கியக் கட்சியின் அமைப்பாளர் திரு. அஹமத் அருசி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். அவர் தமது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:-

தமிழ்ஈழப் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினையாகும். இதற்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும், இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு, இந் நாட்டின் நான்கு பெரும் இனங்களான, கண்டிச்சிங்களவர் கரையோரச் சிங்களவர், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய இனங்களின் பிரதிநிதிகள் கூடிப்பேசி, எல்லோரும் ஏற்கக்கூடியதான ஓர் அரசியல் தீர்வை உருவாக்கவேண்டும். இது எல்லோரதும் பிரச்சினையாகும்."

—இவ்வாறுஅந்தஅறிக்கை கூறுகிறது.

# உருக்குலைகிறது திருக்கோணமலை! தலைநகரின்றித் தமிழீழம் தவிப்பதா?

## தலைவர்களே எமக்கு கைகொடுக்க வாரீர்!

கோணநாதன் குடியிருக்கும் கோயில்; இராவணன் ஆண்ட இன்பபூமி அருணகிரிநாதரின் அருட்பா பெற்ற தலம் வெந்நீரூறும் கன்னியாவென்னும் புண்ணிய தீர்த்தமுள்ள புனிதமண் திருகோணமலை.

விண்ணைநோக்கி வளர்ந்த தென்னஞ் சோலைகள். மண்ணையும் மனிதரையும் வாழவைக்கும் செந்நெல்கழனிகள் உப்பென்றும், கரும்பென்றும். கடல்வளமென்றும் எத்தனை செல்வமுண்டோ அத்தனை செல்வங்களும் தன்னகத்தே கொண்டுள்ள இந்தயிழ்மண் திருமலை.

ஆனல்,

திருக்கோணமலை இன்று திருக்குலைந்து செருக்கிழந்து சிறப்பழிந்து சின்னபின்னமாய் கிடக்கிறது!

ஏன்?

சிங்கள வெள்ளம் பெருக்கெடுத்ததால் செந்தமிழினம் சீரழிந்து விட்டது. திருமலை பஸ் நிலையத்தில் இறங்கினல். தமிழ் மணத்தைக் காண முடியாது. சிங்கள நாற்றமே சிறிவரும்.

கோணநாதன் குடிகொண்டிருக்கும் கோயிலைக் காணப் போனால், மஞ்சளாடைகளையே காண வேண்டிய முறையில் பௌத்த மடமும் விகாரையும் வாசலில் இருக்கிறது.

காலங்காலமாய் கன்னித் தமிழர் வாழ்ந்த கந்தளாய் கந்தலே ஆகிவிட்டது. பச்சைத் தமிழர் பரம்பரையாய் வாழ்ந்த நொச்சிக்குளம் 'நொச்சியாகம' ஆகிவிட்டது. இந்தமிழர் திரிவுபடாமல் வாழ்ந்த திரியாயும் பறிபோகும் நிலை. நிலாவெளிப் பெரியகுளத்தில் வில்கம் விகாரை: அதைச் சுற்றிச் சிங்களக் குடியேற்றம்!

திருமலை நகரத்துக்குள் ளேயே சிறியாபுர என்றும் சிங்களபுரமென்றும், அபயபுரமென்றும் எத்தனை அபாயபுரங்கள்-அப்பப்பா! ஒன்றா! இரண்டா! திருக்கோணமலைக்கு ஆபத்துக்கள்!

இவற்றையெல்லாம் எம். பி. யாரால் மட்டும் தீர்த்து விடமுடியாதென்பது உண்மையே!

ஆனல்! மக்களை விழிப்படையச் செய்து உணர்ச்சியூட்டி! சிந்தனை வழியில் செயல்படச் செய்வது நம் தலைவர்களின் கடமையன்றோ? திருகோணமலையில் தமிழ்இளைஞர் பேரவை செத்துப்போய் விட்டதோ! என்று எண்ணுமளவிற்கு அது நீண்ட தூக்கத்தில் கிடக்கிறது. ஒரு சமூகத்திற்கு ஜீவநாடியாக விளங்குவது இளைஞரின் சக்தியன்றோ எனவே இளைஞர் பேரவையின் தூக்கத்தைக் கலைத்து இயங்க வைக்க சம்பந்தப்பட்ட இயக்குனர்கள் உடன் செயல்பட வேண்டும்!

தேர்தற்காலத்தில் பார்க்கிறோம்! மூலைக்குமூலை கருத்தரங்கும் கலந்துரையாடலும் நடைபெறுகிறது. அப்போது எம்மத்தியில் எவ்வளவு உற்சாகம், உத்வேகம் உணர்ச்சி ஓர்மம்!

தேர்தல் முடிந்ததும் இங்கு கருத்தரங்குமில்லை! கத்தரிக்காயுமில்லை! இனி அடுத்ததேர்தல் வரும்வரை தேய்ந்து கொண்டேபோகும் சிந்தனையும் உணர்ச்சியும்.

இங்குள்ளோருக்கு சுயமாக உணர்ச்சியும் ஓர்மமும் இல்லையென்று கூற வில்லை. அதைத் [illegible] வளம்காண நல்ல தலைவர்கள் முன்வருவதில்லை! என்பதே பெரும் வேதனை!

நானும் திருகோணமலையில் பிறந்த ஒரு தமிழ் இளைஞன் என்ற காரணத்தால் நம் தலைவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். நீங்கள் ஈரமான இடங்களையே ஈரமாக்கிக் கொண்டிருக்க வேண்டாம்! எங்கள் காய்ந்துபோன இடத்தை ஈரமாக்க வாருங்கள். ஒரு மாதத்துக்கோ இரண்டு மாதங்களுக்கோ ஒரு முறையாவது எங்கள் மண்ணுக்கு வாருங்கள் முறைக்கு முறை ஒவ்வொரு மூலைமுடுக்குகளில் கருத்தரங்குகளை நடாத்தி சீரிய முறையில்செயல்படக்கூடிய சிந்தனையைத் தாருங்கள்.

இல்லையேல், எதிர்காலத்தில் கோணேசர் கோயிலைக் காண முடியாது. ஏதாவதொரு கோதாரி, விகாரையோ, கோகன்ன விகாரையோதான் காட்சியளிக்கும் தமிழீழம் அமையும் போது தலைநகர் இல்லாது போய் விடும். இதை நன்கு சிந்தித்துச் செயலாற்றுங்கள்.

— நிலாதமிழின்தாசன், நிலாவெளி—3

## உரும்பராய் இந்துக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர் கூட்டம்

அண்மையில் உரும்பராய் இந்துக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர் மன்றக் கூட்டம் பேற்படி கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் சிறப்பு பேச்சாளராக "சாதியொழிப்பு" பற்றி சுதந்திரன் ஆசிரியர் உரையாற்றினார்! இறுதியில், மன்றச் செயலாளர் செல்வன் வரதராசன் நன்றி நவின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்புமொழி சிங்களம் கட்டாய பாடமாகிறது!

உத்தியோக மொழியான சிங்களம், இணைப்புமொழியென்ற உருவத்தில் தமிழ்ப் பாடசாலைகளில் கட்டாய பாடமாகத் திணிக்கப்படவிருக்கிறது. புதிய பாடவிதானத்தில் இந்த இணைப்புமொழி கட்யாயமாகப் புகுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு பிள்ளைக்கு அதன் தாய்மொழிதான் கட்டாய போதனுமொழியாக இருக்க வேண்டுமென்பதற்கு அரசியலமைப்பில் பாதுகாப்பு, உத்தரவாதம் தரப்படவில்லை. ஏதாவது விரும்பிய தேசிய மொழியொன்றை (அதாவது, தமிழ் அல்லது சிங்களம்) ஒரு பிள்ளை தனது போதனுமொழியாகத் தேர்ந்தெடுக்கலாம் என்று போதும்பலாக விடப்பட்டுள்ளது. மலையகத்திலும், தென்னிலங்கையிலும் தமிழ்ப் பாடசாலைகளின்றித் தவிக்கும் தமிழ் மாணவர்கள், சிங்களத்தை போதனுமொழியாக வேறுவழியின்றி ஏற்கச் செய்யும் திட்டத்துடனேயே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, உத்தியோக மொழியாகச் சிங்களம் மட்டுமே இருப்பதால், அதன் மூலம் படித்தால் சுலபத்தில் உத்தியோகம் பெறலாம் என்ற நப்பாசையாலும் தமிழ்ப் பிள்ளைகள் சிங்களத்தை போதனுமொழியாக காலக்கிரமத்தில் ஏற்பார்கள் என்று அரசாங்கம் நம்புகிறது. அதற்காகவே தாய்மொழி கட்டாயப் போதனுமொழியாக்கப்படவில்லை.

இந்த நிலையில் சிங்களம் இணைப்பு மொழியாகக் கட்டாயபாடமாகப் போதிக்கப்படவுள்ளது. சிங்களப் பிள்ளைகளும் தமிழை இணைப்புமொழியாக கட்டாய மாகப் படிக்கத்தான் வேண்டுமென்றும் இச் சட்டம் கூறுகிறது.

எப்படியாயினும், தமிழர்களை அடக்கி ஆளுவதற்காக சிங்களவர்கள் தமிழ் படிப்பார்கள். அடிமைகளின் மொழியைத் தெரிந்து கொண்டால்தானே அடிமைகளை ஆட்சிபுரியலாம்? தமிழ்ப்புலிகளை அடக்க சிங்களச் சிங்கங்கள், புலிகளின் மொழியைப் படிக்கவேண்டியது அவசியமென்று அண்மையில் கல்வியமைச்சரே கூறியிருந்ததும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இந்நிலையில், தமிழர்களை அடக்கியாள்வதற்காக சிங்களவர்கள் தமிழைப் படிப்பார்கள்; தமிழர்களோ தமது தாய்மொழிக்கு உத்தியோகமொழி அந்தஸ்தோ, ஆட்சி மொழியந்தஸ்தோ எதுவுமின்றி தமிழ் அடிமை மொழியாக கிடக்க—ஆதிக்கமொழியான சிங்களத்தைப்படிக்க வேண்டும். இதுவே இணைப்புமொழித் திட்டத்தின் இரகசியமாகும்.

## "விடுதலைப் போராட்டத்தில் மகளிர் பங்கு மகத்தானது"

### —திருமதி கணேசலிங்கம் அறிவுரை

1-11-78ல் பட்டிருப்பு தொகுதி மகளிர் பேரவைக் கூட்டம் திருமதி முத்துலெட்சுமி கணேசலிங்கம் அவர்களது இல்லத்தில் திருமதி முத்துலெட்சுமி கணேசலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தலைவி தமது தலைமையுரையில் பேசியதாவது:-

"எங்களுடைய கடமை மிக வில்லங்கமானது. எங்களுடைய நோக்கம் நாங்கள் இழந்த தமிழ் ஈழ இராச்சியத்தை மீளப்பெறுவது. த வி. கூட்டணியில் நாம்ஒரு அங்கமாக விளங்குகிறேம். எமது தலைவர்கள் தமிழ் ஈழ விடுதலைக்கான போராட்டத் திட்டங்களைத் தீட்டி தருவார்கள். அத் திட்டங்களை நாங்கள் முன்னின்று செயல் படுத்த வேண்டும் மற்றும் தமிழ் ஈழ இராச்சியத்திற்கான தமிழர்களின் பூமி அங்குலம் அங்குலமாக சிங்கள ஏகாதிபத்தியத்தால் பறிபோய்க் கொண்டு வருகின்றது. இச் சிங்கள குடியேற்றத்தை தடுத்துநிறுத்தி எங்கள் பூமியை காப்பாற்ற முன் வரவேண்டும் நாங்கள் ஒரு குழுவாக இயங்கினல் வடமுனை கேவியாமடு போன்றஎல்லைப்பிரதேசங்களில் வேளாண்மை செய்து எமது பொருளாதாரத்தை நாமே பெருக்கி எமது பூமியையும் நாம் காப்பாற்றலாம்.

நாம் எமது தலைவர்களுடன் சேர்ந்து தமிழ் ஈழ விடுதலைக்காக போரிடும் போது சிங்கள ஏகாதிபத்தியத்தால் கைது செய்யப்படலாம் சித்திரவதை செய்யப்படலாம். எதற்கும் தயங்காமல் புறநானூறுபடைத்தவீரத்தாய்மாராக இருக்க வேண்டும். விடுதலை அடைந்து வரும் உலக நாடுகளை எடுத்துக் கொண்டால் எத்தனை நாடுகள் அந்நாட்டு வீரப்பெண்மணிகளால் சுதந்திரம் பெற்று இருக்கிறது.

கயானு நாட்டில் விக்கியானு என்ற பெண்மணி தனது நாட்டின் விடுதலைக்காக போராடி வெற்றி கொண்டு வரலாறு படைத்தாள்.

அன்டைய நாடான இந்தியாவின் சுதந்திரத்திற்கு விஜயலெட்சுமி பண்டிட் சரோஜினிநாயுடு ஆகியோர் போராடி வெற்றி கொண்டார்கள்.

பிரான்ஸ் நாட்டில் ஒரு பெண்மணி அந்த நாட்டின் விடுதலைக்காக போராடியதற்காகக் கழுகு மரத்தில் ஏற்றி சவுக்கால்அடித்து பயமுறுத்தியும் பயப்படாமல் பிரான்ஸ் நாட்டின் சுதந்திரம் தான் என் இனத்தின் சுதந்திரம் என்று போராடி பிரான்ஸ் நாட்டின் சுதந்திரம் கண்டாள்.

அண்மையில் வங்கதேசத்தில் பாகிஸ்தான் ராணுவ வெறியர்களின் கோரத்தாக்குதலுக்கு அந்த நகரம் இலாக்கான போது இராணுவ வெறியன் ஒருவனைக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்டாள் செலினு எனும் வீராங்கனை.

உலக நாடுகளில் நடந்த விடுதலைப்போரில் ஆண்களைவிட பெண்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை இவர்கள் நிரூபித்து காட்டியிருக்கிறுர்கள். அதேபோல் நாம் எதற்கும் தயங்காமல் நமது தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக போராட வேண்டும்.

—என்று தமது தலைமையுரையில் பேசினர்.

(தகவல்-மதுரநாயகம் விமலா)

## "ஆங்கிலேயர் ஆட்சிக்குமுன் இலங்கை ஒரேநாடாக இருந்ததில்லை"

### பண்டாரவன்னியன் விழாவில் வி. பி.

"ஆங்கிலேயர் நம்மை ஆளுவதற்கு முன்னர் இலங்கை ஒரே நாடாக இருந்ததில்லை. தனித்தனிக்கொடியும், சின்னமும்; அரசுரிமையும் கொண்ட தனியரசுகள் இங்கு இருந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு இராச்சியத்தின் தலைவனே பண்டாரவன்னியன். இதற்கு ஆதாரமாக இன்றைய கச்சேரிகளில் பழைய அரசர்களின் சின்னங்கள் வைக்கப்பட்டிருப்பதைக்காணலாம். இலங்கை ஒரே நாடு என்றும், தமிழ் இராச்சியம் என்று ஒன்று இருக்கவில்லையென்றும் இன்றைய பாராளுமன்றத்தில் அடிக்கடி கூறப்படும்புரட்டுக்களுக்கெல்லாம் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பா. உக்களும் எமது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும் வேண்டிய விளக்கங்கள் கொடுத்து ஆட்சியாளரின் வாதத்தை முறியடித்துவருகின்றுர்கள்!"

—இவ்வாறு முள்ளியவளையில் 31-10-78ல் நடைபெற்ற பண்டாரவன்னியன் நினைவு நாளில் உரையாற்றிய திரு. வி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

முள்ளியவளை வித்தியானந்தக்கல்லூரி விளையாட்டு அரங்கில் வன்னித்தாய் மன்றம் நடாத்திய பண்டாரவன்னியன் நினைவு விழா அதன் தலைவர் கனக தவராசன் தலைமையில் நடைபெற்றது.

'முல்லைமணி' வே. சுப்பிரமணியம் பீ. ஏ. அவர்கள் பேசுகையில் "முல்லைத் தீவு வவுனியாப் பிரதேசங்களில் இப்பொழுது புதைபொருள் ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புளியங்குளம் பெண்கள் விவசாயத்திட்டத்தில் சிவன் கோயில் ஒன்றின் அழிபாடுகள் கிடைத்துள்ளன. சில இடங்களில் பார்த்தபோது புராதன மாளிகைகள் தமிழ் அரசாட்சி நிலவியது பற்றிச் சான்றுகள் இருந்தும் ஆராய்ச்சிகள் முற்றுமுழுதாக முடிவுறுது ஆராய்ச்சியாளர்கள் கருத்து வெளியிடமாட்டார்கள். எமது மாணவர்கள் மதிப்பு உயர்ந்தவை என்று கருதும் மற்றும் துறைகளை விட்டு தமிழ், இலக்கிய, வரலாற்றுத் துறைகளில் தமது உயர்கல்வியை மேற்கொண்டு தமிழர்க்கோர் நிலையான வரலாற்றினை உறுதிப்படுத்த மேலும் ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும்" என்றுர்.

யாழ் வளாக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியம் எம். ஏ. பேசுகையில் "பண்டாரவன்னியன் ஆங்கில அரசை ஏற்றுக்கொள்ள மறுத்து எதிர்த்துப் போர்புரிந்தான். அவன் வாழ்ந்த மண்ணிற் பிறந்த இளைஞர்களும் வேற்றரசுக்கு அடங்காது சுதந்திரத் தமிழ் ஈழம் அமைக்கத் தலைவர்கள் உறுதுணை புரிய வேண்டும்" என்றுர்.

பேசிய பலரும் "முல்லைமணி" அவர்கள் பண்டாரவன்னியனைப் பற்றியஆராய்ச்சிகளைச் செய்து நூல்வெளியிட்டு சுதந்திரமன்னன் ஒருவனது வரலாற்றை அறியவைத்தமைக்கு நன்றி தெரிவித்தனர்.

மற்றும் திருவாளர்கள் க. கனகையா ந. சண்முகலிங்கம், புலவர் சோ. நடராசன், சி. தெய்வேந்திரம் பிள்ளை —ஆகியோர்பேசினுர்கள். கே. வி. சிதம்பரநாதன் செயலாளர் நன்றியுரை கூறினுர். இரவுமுல்லைமணியின் "பண்டாரவன்னியன்" நாடகமும், வேறு கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. விழாவன்று நண்பகல் கற்சிலைமடுவிலுள்ள பண்டாரவன்னியன் சிலையடியில் . அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

—"நயனன்"

## வீரக்கிழக்கின் விரிகதிரே!

புறங்காணுப் பார்த்தனுக்காய்ப் புகன்ற கீதைதனை
திறமாக வெண்பாவாய்த் தீந்தமிழில் தந்த
புலவர்மணி என்று போற்றும் பெருந்தகையே!
புலவர்அணி தவிக்க புண்ணியனடி போனதுவேன்?

விண்ணுலகுவிரைந்திட்ட விபுலானந்தவித்தகன்பின்
வீரக் கிழக்கில் வீற்றிருந்த விரிகதிரே!
மண்ணுலகு மறத்தமிழர் மனமகிழும் நேரத்திலே
மார்புதட்டவேண்டியநீமார்படைத்துப்போனதேன்

—இந்து இளைஞர் மன்றம்
365, பிரதான வீதி, திருகோணமலை.

### இலவசம்

கால்நடை உணவுக்குப் பயன்படுன்ற நல்லஇன புல் நாற்றுக்களை யாழ்ப்பாணம் 'மில்க்வைற்' தாபனத்தார் இலவசமாக வழங்குகிறுர்கள். தேவையுள்ளவர்கள் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப்பவுடர் வாங்கி உபயோகியுங்கள், பல அளவுகளில் விற்பனையாகின்றது.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்புக் குடியேற்றத்தில் ஜனாதிபதி ஜே. ஆர். உறுதி!

## சென்னை பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவிப்பு

தமிழ் தேசிய இனத்தினதும், அதன் பாரம்பரியத் தாயகத் தினதும் அழிவுக்கு வழிவகுக் கும் கலப்பு குடியேற்றத் திட் டமே யூ. என். பி. அரசாங்கத் தின் கொள்கையென்பதை திட்டவட்டமாக சிறிலங்காவின் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த் தன சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மீண்டும் ஒரு முறை உறுதிப் படுத்தியுள்ளார்,

அண்மையில் ஜனாதிபதி ஜே. ஆர். மேற்கொண் டிருந்த இந்திய விஜயத்தின் போது தமிழ்நாடு அரசு சார்பில் தமிழ்நாடு பதில் முதலமைச்சர் திரு. கி. மனோகரன் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு மதிய விருந்தளித்தார். இந்த விருந்தின்போது ஏராள மான பத்திரிகையாளர் களும் கலந்து கொண்டனர், இவ்விருந்தின்போது பேட்டி யளிக்க நேரும் என்று ஜனாதி பதி ஜே. ஆர். எதிர்பார்த் திருக்கவில்லை. ஆயினும், இலங்கையிலுள்ள தமிழ்— சிங்கள இனப்பிரச்சினை தொடர்பாக திரு, ஜே. ஆர். விளக்கமளிக்க வேண்டு மென யாரும் எதிர்பாரா மலே திரு. மனோகரன் ஒரு குண்டைத் திடீரெனத் தூக் கிப்போடவே, தமிழ் இனப் பிரச்சினை குறித்து திரு. ஜே. ஆர். அங்கு தொட்டுப் பேச வேண்டிய ஒரு சூழ் நிலை ஏற்பட்டது.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த் தனவின் விளக்கத்தில் திருப்தியடையாத பத் திரிகை நிருபர்கள் கேள் விக்குமேல் கேள்வி போட்டு திரு. ஜெயவர்த்தனவை துளைத்தெடுத்தார்கள். தமிழ் பிரதேசத்தில் சிங்கள வரைக் குடியேற்றும் இன வாதக் கொள்கைபற்றியே பெரும்பாலான கேள்விகள் அங்கு எழுப்பப்பட்டன.

இதற்குப்பதிலளித்த திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன நாடு முழுவதும் — தேசிய அடிப்படையிலேயே குடி யேற்றங்கள் இடம் பெறு மென்றும், சிங்களவருக் கென்றும், தமிழருக்கென் றும், முஸ்லிம்களுக்கென் றும் தனித்தனியான குடி யேற்றங்கள் உருவாக்கு வதைத்தான் விரும்பவில்லை யென்றும் இப்படிச் செய் தால் ஒரு நாட்டுக்குள் பல நாடுகள் உருவாகிவிடுமென் றும் எங்கும் எல்லோரையும் குடியேற்றுவதே தமது அர சின் கொள்கையென்றும், அறிவித்திருக்கிறார்—

அதாவது, தமிழ் மக் களின் தாயகமான தமிழ் பிரதேசங்களில் தமிழ்பேசும் மக்கள் மட்டுமே குடியேற் றப்படமாட்டார்கள்; சிங் கள மக்களும் குடியேற்றப் படுவார்கள்; இப்படியான கலப்புக் குடியேற்றங்களை நடத்துவதன் மூலம்தான், தமிழ் மக்களுக்கெனத் தனித்தாயகம் ஒன்றை இல் லாமல் சிதைத்து 'இலங்கை ஒரே நாடு'' என்ற தமது இலக்கை அடைய முடியு மென்பது தான் ஜனாதிபதி ஜே. ஆரின் உள்ளக்கிடக்கை யாகும்.

இனவாத அடிப்படையில் குடியேற்றம் இல்லையென்று சென்னையில் ஜே. ஆர். கூறிய தன் பின்னுலுள்ள இந்த உட்பொருளை விளங்கிக் கொள்ளும் ஆற்றலின்றி, அவர் சிங்களக் குடியேற்றக் கொள்கையை கைவிட்டு விட்டதாக யாரும் ஏமா றுமலிருப்பார்களாக.

# மந்திரி தேவநாயகத்துக்கு ஜனாதிபதி பட்டைநாமம்!

அண்மையில் ஜனாதிபதி ஜே. ஆர். இந்திய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டி ருந்த போது, தமிழீழப்பிரச் சினை பற்றியும், தமிழர் விடு தலைக் கூட்டணி பற்றியும், சிங்களக் குடியேற்றம் பற்றி யும் அவர் சென்ற இடமெங் கணும் கேள்விக் கணைகள் தொடுக்கப்பட்டன.

இந்திய மக்கள், இலங் கைத் தமிழர் பிரச்சினை மீது கொண்டுள்ள அதீதமான அக்கறையை இக்கேள்விக் கணைகள் எடுத்துக்காட்டின.

இந்தக் கேள்விக்கணைகளி ருந்து தம்மைக்காப்பாற்றிக் கொள்வதற்கு, பல தந்தி ரோபாயமான பதில்களை ஜே. ஆர். அங்கு அளிக்க வேண்டியதாயிற்று.

அவற்றிலொன்றுதான், அரசாங்கத்துடன் கூட்டணி பா. உக்கள் இருவர் சேர விருப்பம் தெரிவித்திருக்கி ருர்கள் என்ற ஆதாரமற்ற வெடிகுண்டாகும்.

ஜனாதிபதி ஜே. ஆர். இவ் வாறு இந்தியாவில் கூறியவு டன், இங்கு பலவிதமான ஊகங்கள் எழுந்தன.

அதாவது, அப்படிக் கட்சி விட்டுக்கட்சி மாற விரும்பும் எதிர்க்கட்சி பா. உக்களுக்கு வசதி செய்து கொடுக்கு முக மாக— கட்சி மாறினாலும் கட்சி மாறுபவர்கள் பா. உ. பதவியை இழக்காத முறை யில்— அரசியலமைப்புக்கு அரசு சார்பில் திருத்தம் கொண்டு வரப்படலாம் என் பதே அந்த ஊகமாகும்.

ஆனால், இந்த ஊகங்கள் எல்லாம் வெறும் கற்பனை களேயென்றும், இவ்வாறான திருத்தம் எதுவும் அரசிய லமைப்புக்குக் கொண்டு வரப்படமாட்டாதென்றும் நீதியமைச்சர் திரு. தேவநா யகம், விழுந்தடித்துக் கொண்டு நவம்பர் 7ம் திகதி நாளேடுகளில் ஓர் அறிக்கை விடுத்தார்.

ஆனால், பாவம் தேவநாய கம்! அவரைக் கேட்டுக் கொண்டா எல்லாம் நடக்கி றது!

புதிய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதி தாம் விரும்பி யபடி ஆட்டுவிக்கும் தஞ்சா வூர்ப் பொம்மைகள் தானே அமைச்சர்கள்?

ஜனாதிபதி ஜே. ஆர். என்ற தனிமனிதர் ஆட்சிதானே நடைபெறுகிறது. இதிலே அடிமைத்தமிழ்ச் சாதியைச் சேர்ந்த அமைச்சர் தேவநா யகத்தின் சொல், எங்கே அம்பலமேறப்போகிறது?

ஆம், தேவநாயகத்தின் கூற்றை முற்றாக மறுக்கிற முறையில்— சென்னையை விட்டுக் கிளம்புமுன் ஜே. ஆர். வெளியிட்ட அறிக்கை அமைந்து இருக்கி றது;

''தமிழர் விடுதலைக் கூட்டணி யைச் சேர்ந்த இருவர் அரசுடன் சேருவதெனத் தீர்க்கமாக முடிவு செய்யும் பட்சத்தில், அவர்களைச் சேர்ப்பதற்காக அதற் கேற்ற முறையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தவும் நான் தயாராக இருக்கிறேன்''

இவ்வாறாக சென்னைப் பத் திரிகையாளர் மாநாட்டில் ஜே. ஆர். ஜெயவர்த்தன திட்டவட்டமாகத் தெரிவித் துள்ளார்.

தேவநாயகம் அரசியல் சட்டம் திருத்தப்படமாட் டாது என்கிருர்; ஜனாதிபதி ஜே. ஆரோ, திருத்தம் கொண்டுவரத்தாம் தயார் என்று அடித்துக் கூறிவிட் டார்.

ஐயோ பாவம் தேவநாய கம், என்ன இருந்தாலும் தேவநாயகத்துக்குஜனாதிபதி இப்படி பட்டை நாமம் போட்டிருக்கக் கூடாது!

# சுடர்

( இம்மாத இதழில் )

★ 'வீரனை மெச்சிய வீரன்' — க. வேலாயுதம் (இதயத்தை தொடும் உண்மைச் சம்பவம்)

★ 'தனிப்பாடல் விருந்து' — க. கலாமோகன் (இலக்கியச் சுவை ததும்பும் கட்டுரை)

★ 'உள்ளத்தால் கெடாதவள் உமா'— செ. குணரத்தினம் (நெஞ்சை உருக்கும் சிறுகதை)

★ இரசிகமணியின் ஆபூர்வ நினைவுகள் — பொ. சண்முகநாதன் (பல அரிய தகவல்களடங்கிய கட்டுரை)

★ கருங்காலிகள் — காவலூர் எஸ். ஜெகநாதன் (சமூக அடிமைத்தனத்தை சாடும் சிறுகதை)

மற்றும் பல சிறுகதைகள், கவிதைகள், விகடத் துணுக்குகள், அரசியல் துணுக்குகள், விநோதச் செய்திகளுடனும், மங்கை யர் மன்றம்''சுடர் வட்டம்' ஆகிய புது அம்சங்களுடன் வெளிவந்து விட்டது.

**தமிழர் வீடுகளிலெல்லாம் ஒளிவிடவேண்டிய சஞ்சிகை**

**சுடர்**

விற்பனையாளர்கள் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி

நிர்வாகி,
' சுடர் '
194 ஏ: பண்டாரநாயக்க வீதி'-
கொழும்பு - 12.

# "சன்சோனி கொமிஷன் எவிடென்ஸ்" அச்சிடும் நிறுவனத்துககு குண்டு வீச்சு

"தசன்சோனிக் கொமி ஷன் எவிடென்ஸ்'' என்ற ஆங்கில வார இதழை அச்சி டும் கொழும்பிலுள்ள சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் என்ற அச்சகத் தின் மீது பெற்ருேல் குண்டு வீசப்பட்டுள்ளது. இதன் பயனக மேற்படி அச்சகத் தின் ஒரு பகுதி எரிந்து சாம் பலானது.

கொழும்பு பண்டார நாயகா மாவத்தையிலுள்ள இவ் அச்சகத்தின் மீது இனந் தெரியாதவர்களால் மேற் கொள்ளப்பட்ட இத்தாக்கு தல் பற்றி பொலிசார் விசா ரணை நடத்தி வருகின்றனர்.

ஜனாதிபதி ஆணைக்குழு முன் முந்திய ஆட்சி பற்றி கழுவப்பட்டு வரும்அழுக்கை அப்படியே குடித்து நாள் தவருமல் பொதுமக்களுக்கு வாந்தியெடுக்கும் ஒலிபரப் புக் கூட்டுத்தாபனம், அரசு நியமித்த சன்சோனி ஆணைக் குழு விசாரணைகளை இருட்ட டிப்பு செய்து வந்த போதி லும், ''சன்சோனிக்கொமி ஷன் எவிடென்ஸ்'' என்ற வார இதழ் வாசகர்களுக்கு கொமிஷன் விசாரணையை அப்படி அப்படியே வாரா வாரம் தந்து வருவது தெரிந் ததே.

இப்பத்திரிகையை அச்சி டும் அச்சகத்திலும், இப்பதி திரிகை வெளியீட்டாளா ரான சட்டத்தரணி திரு. எஸ்- சி. சந்திரகாசனிடத்தி லும் சி. ஐ. டி. பொலிசார் ஏற்கனவே விசாரணை நடத் தியிருப்பதும் வாசகர்கள் அறிந்ததே.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறு வனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக் கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம் பர் மாதம் 15ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org